பொய்யாமொழி

ஆசிரியர்—மா. பாஸ்கரனார்.

செய்யா மொழிக்குந் திருவள்ளுவர் மொழிந்த
'பொய்யா மொழி'க்கும் பொருளொன்றே—செய்யா
அதற்குரிய ரந்தணரே யாராயி னேனை
யிதற்குரிய ரல்லாதா ரில்.

கதிர் 1 } திருவள்ளுவர் ஆண்டு 1981, கார்த்திகை 14, (29—11—50) புதன்கிழமை { மணி 14

கண்டதுண்டோ!

புலவர், ப. அரங்கசாமி.

முன்னோர்கள் கைக்கொண்டார் எனக்கூறி மூடமதிக் கொள்கை பற்றித்
தன்மானம் ஒருசிறிதும் இல்லாது தானடிமை எனவே யாகி
சொன்னாலும் அறியாது தானேயும் உணராத சோம்பல் கூட்டம்
இந்நாட்டில் அல்லாது எங்கேனும் நீங்களுந்தான் கண்ட துண்டோ!

தன்வாழ்வை வளமுள்ளத் தளிர்சோலை எனவாக்கும் தகுதி யுற்றுத்
தன்னெஞ்சில் நாடோறும் வளர்ந்துவரும் தன்இன்பக் காத லாலைத்
தன்எண்ணம் விருப்பம்போல் மணந்திடவே சாதிமதத் தடையுண் டாக்கும்
கன்னெஞ்சச் சமுதாயம் இங்கன்றி வேறெங்கும் கண்ட துண்டோ!

மண்ணுக்கும் மாட்டுக்கும் மரத்துக்கும் சுதந்திரங்கள் உண்டு, ஆனால்
பெண்ணுக்கு இந்நாட்டில் பேசுதற்கும் சுதந்திரமே இல்லை என்பார்
கண்ணுக்கு நிகரேநற் கனியமுதே கற்கண்டே என்று மட்டும்
விண்ணளவு புகழ்கின்ற வீண்கூட்டம் வேறெங்கும் கண்ட துண்டோ!

உலகத்தில் பிறந்திட்டார் அனைவருமே பல்வேறு இன்பத் தோடும்
நலமுடனே வாழ்ந்திடுதல் வேண்டுமென வேதாந்தம் நவில்வோ ரெல்லாம்
இலகுமொழிப் பெண்களுக்கு "விதவைமணம்" இயற்றிடுதல் வேண்டும் என்றால்
குலம்பேசி சாத்திரத்தைக் கொண்டெதிர்த்தல் வேறெங்கும் கண்ட துண்டோ!

வார இதழ். ★ விலை அணா 1.

பணக்காரன் யார்?

(R. கலியபெருமாள், சேலம்.)

[பொய்யாமொழி 8—11—50 இதழில் வெளியான "பணக்காரன்யார்?" என்ற கட்டுரைக்கு மறுமொழி]

★

“மேழிச்செல்வம், மக்கட்செல்வம், பொருட்செல்வம் ஆகிய அனைத்தையும் நிரம்பப் பெற்றவன் செல்வந்தன் ஆகிறான் குறைவாகப் பெற்றவன் தரித்திரனாய் ஆகிறான் நிறைவு குறைவு என்பது அவரவர்களுடைய மனதைப்பொறுத்தது” என்று கூறியிருக்கிறார் கட்டுரையாசிரியர். நிறைவு குறைவு என்பது அவரவர் மனதைப் பொறுத்ததுமட்டுமல்ல, அவரவர் வாழும் நாட்டின் வசதி, சூழ்நிலை, பொருளாதாரம் இன்ன பிறவற்றையும் பொருத்தது என்கிறோம். எப்படியெனில் ஒருவகுப்பின் வினைத்தாள் மிக மிக எளிமையாக குறிக்கப்பட்டிருக்கிறது என்று வைத்துக்கொள்வோம் வகுப்பிலுள்ள எல்லா பையன்களும் ஐம்பதுக்கு மேற்பட்ட மார்க்குகளைப் பெற்றிருக்கிறார்கள், வகுப்பிலேயே கடைசிப் பையனைப் பார்த்து ஐம்பது மார்க்கு வாங்கிவிட்டாய்! கெட்டிக்காரன் நீ! சபாஷ்! என்று போற்ற முடியுமா? மற்றொரு வகுப்பிற்கு வினைத்தாள் மிக மிகக்கடினமாகக் குறிக்கப்பட்டிருப்பதாக வைத்துக் கொள்வோம். முதல் மார்க்கே நாற்பத்தெட்டுதான். அப்படிப்பட்ட பையனைப் பார்த்து போடா மக்கு! உன் மார்க்கு ஐம்பதுக்கும் குறைவுதானே!” என்று தூற்றமுடியுமா? எனவே இதிலிருந்து என்ன தெரிகிறது பையனுடைய மார்க்கைமட்டும் பார்க்கக்கூடாது அவன் அதாவது வகுப்பின் சூழ்நிலையையும் பார்க்கவேண்டும் அதாவது வகுப்பின் சராசரி (Average) மார்க்கைப் பார்க்கவேண்டும். சராசரி மார்க்கைவிட பையன் மார்க் அதிகமாக இருந்தால், அது முப்பதாக அல்லது இருபத்தைந்தாக இருந்தாலும் பையன் கெட்டிக்காரன், சராசரிக்கு மேற்பட்டவன் (More than average capacity intelligence) என்று கூறப்படுகிறது. அதற்காகத்தான் சர்டிபிகேட்டில்கூட பையனின் மார்க்கைப் பதிவதோடு சராசரி மார்க்கும் பதியப்படுகிறது. இதேபோலத்தான் ஒருவனை செல்வவானா அல்லவா என்று பார்க்க அவன் வாழும் நாட்டின் செல்வநிலை தெரியவேண்டும். இதைக் கொண்டுதான் அவன் பெற்றிருக்கும் வசதியை நிர்ணயிக்க வேண்டுமேயொழிய மன நிறைவு குறைவைப் பொறுத்து அல்ல மன நிறைவுதான் என்று பார்த்தால், ஒன்றுமில்லாத ஒருவன் தன்னால் வாழ்நாளில் முன்னேற முடியாது என்று சோம்பேரித்தனம், தன்னம்பிக்கையற்றதனம் (Inferiority complexion) காரணமாக தனக்கு இருப்பதே போதும் என்று திருப்திப்பட்டு விடுவானானால் அவனை செல்வந்தன் என்று கூறமுடியுமா?

எனவே ஒருவனை செல்வந்தன் என்று சொல்வது அவனுடைய நிலையைமட்டும் பார்த்து அல்ல. அப்படிச் சொன்னால் அது பொருளாதாரம் (Economics) புரியாதவர்கள் கூற்று ஆகும் அவன் நிலையோடு அவன் நாட்டின் நிலையையும் வைத்துப்பார்த்துக் கூறுவதே அறிவுடைமை என்பது மட்டுமல்ல, பொருளாதாரக்கண்கொண்டு பார்த்துச் சொல்வதுமாகும்.

எவ்வளவு பணக்காரன் ஆனாலும் தனக்கு மேல் நிலையில் உள்ளவனை எண்ணி ஏங்குகிறான் மனநிம்மதி காணு... தி... தரித்திரன் ... கிறார் கட்டுரை... ஆசிரியர். வாழவேண்டும் என்னும் பசி எவனுக்கிருக்கிறதோ அவன் நன்றாக வாழ்வான். வாழ்வில் இன்பமும் காணுவான். என்கிறார்காண்டேகர் எவன் ஒருவனுக்கு மேலும் மேலும் உயரவேண்டும் என்னும் எண்ணம் தோன்றுகிறதோ அவன்தான் உயர்வான், என்று கூறுகிறது மனோதத்துவம். செயலின் முதற்படி எண்ணம். என்கின்றனர் பேரறிஞர்கள் எனவே மேலும் மேலும் உயரமுயற்சிப்பதிலே தவறு கிடையாது என்பது மட்டுமல்ல அந்த எண்ணம் கட்டாயம் ஒவ்வொருவருக்கும் வேண்டும் எண்ணத்தை ஏற்றிக்கொண்டு அதற்கேற்ப திட்டமிட்டுமுயற்சி செய்யாமல் சோம்பேறித்தனமாக பொறுமை மனப்பான்மையோடுஇருப்பவர்களை நாம் வன்மையாககண்டிக்கிறோம். திண்மையாக உயர வேண்டும் என்று எண்ணிவிட்டவர்கள் அங்ஙனம் செயலற்று இருக்கமாட்டார்கள் என்பதுதிண்ணம் எண்ணத்திலே வலுவற்றவர்கள்தான் வாளாவிருந்து வசைச்சொல்லுக்கு ஆளாவர். ஆகையால் தான் உலகப் பேரறிஞர் வள்ளுவர்

> எண்ணியர் எண்ணியாங்கெய்துப, எண்ணியர்
> திண்ணிய ராகப் பெறின். —என்றார்

“அடுத்தபடியாக பணக்காரன்—முதலாளியார் என்று பார்ப்போம். இந்த இரண்டு சொற்களும் கிட்டத்தட்ட ஒரே பொருள் கொடுப்பவைதான்’ என்கிறார். பணத்தை உடையவன் பணக்காரன், ஆனால் அவனை முதலாளி என்றுகூறிவிட முடியாது. எனக்குப் பத்தாயிரம் ரூபாய் பணம் இருக்கிறது என்று வைத்துக் கொள்வோம். அதனை பாங்கியிலே போட்டுவிட்டு எங்கே ஓர் ஊரில் உட்கார்ந்து கொண்டு அதில் வரும் வட்டியில் என்வாழ்நாளைக் கழித்துக்கொண்டிருந்தால் என்னை யார் முதலாளி என்று கூறுவார்கள்? எனவே பணக்காரன் அத்தனைபேரும் முதலாளி ஆகிவிட முடியாது; ஆவதுமில்லை என்பதை புணர்கிறோம். ஆனால் ஏழை ஒருவன் ஒரு பணக்காரனை அணுகி ஆயிரம் ரூபாய் கடன் கேட்கிறான் அவனும் இவனது குணம், செயல் நாணயம் ஆகியவற்றை நம்பி கடன் கொடுக்கிறான் என்று வைத்து கொள்வோம் இவன் அந்தமுதலைக்கொண்டு ஒருதொழில் ஆரம்பிக்கிறான் அப்போது இவனிடம் சில தொழிலாளிகளும் வேலை செய்கிறார்கள். இப்போது இவன் முதலாளி ஆகிறான். இவன் ஏழைதான்; கடனாளிதான். என்றாலும் இவன் இப்போது முதலாளியாகிறான். எனவே முதலாளிகள் எல்லோரும்பணக்காரர்கள் அல்ல. ஆகவே பணக்காரர்கள் எல்லோரும் முதலாளிகள் அல்ல என்பதும் முதலாளிகள் எல்லோரும் பணக்காரர்கள் அல்ல என்பதும் கண்டோம் ஆனால் சில பணக்காரர்கள் முதலாளிகளாகவும், சில முதலாளிகள் பணக்காரர்களாகவும் இருப்பதை நாம் மறுக்கவில்லை;

தென்னாட்டு முதலாளிகள் எல்லோரும்சேர்ந்தாலும் வடநாட்டு ஒரு முதலாளிக்கு ஈடாகாது என்கிறார். உண்மை ஒப்புக்கொள்கிறோம். ஆகையினாலேயே

தி[ரு]வும் - அறிவும்.

சொல்லேருழவன்.

★

[மு[ன்] தொடர்ச்சி]

காலத்தின் வேகத்தைப்பற்றி இன்னும் சில கூறுவோம். தமிழ் வடமொழி ஆங்கில மொழிகளில் வல்லுனரான பூரிசங்கராச்சரியார்? அரிசன ஆலயப்பிரவேசம் கூடாது, என்பதற்கு சுருதி, யுக்கி, அனுபவ—விஞ்ஞான ஆதாரங்களுடன் 1x4 சைஸில் 300 பக்கங்கள் கொண்ட இரண்டு வால்யங்கள்கொண்ட நூல்ஒன்று எழுதி அரசாங்கத்திற்கு சமர்ப்பித்தார் 1935ல் இந்நூலில் உள்ள ஆதாரங்களுக்கு தர்க்க முறையில் யாரும் பதில் சொல்லமுடியாதுதான். "வல்லான் வகுத்தது வாய்க்கால்" என்றபடி எனது தர்க்கசாஸ்திர பாண்டித்தியத்தினல் உண்டு என்பதை இல்லை என்பேன். இல்லை என்பதை உண்டுயென்று நிலைநிறுத்துவேன் யென்று வேதாந்ததேசிகர் வாய்வீச்சுவீசி இருக்கிறர் வல்லவனுக்கு வல்லவன் வையகத்தில் உண்டு என்பார்களே! அதுபோல் ஜாதிஉயர்வு என்று சாஸ்திரம் கூறுவதானல் அஞ்சாமோத்தும் ஆறுமூன்றும் கழிப்பேனும், (ஐந்தாம் வேதம் என்று கூறும் பாரதமும் 18 அத்தியாயங்களையுடைய கீதையையும் தள்ளிவிடவேண்டியது) பாரதம் வலைச்சி வயிற்றில் பிறந்த வியாசர் கூறியதாகும்; கீதை இடையனல் சொல்லப்பட்டதாகும், இவைகள் ஏன் உங்களுக்கு? கவைகளை தலையில் சுமந்துகொண்டு எங்களை விரட்டுகிறீர்களா? என்றுகூறி பதினறு வயது சிறுவனகிய அழகிய மணவாளன் என்பவர் வேதாந்த தேசிகரை ஸ்ரீ ரங்கத்தினின்றும் விரட்டிவிட்டார் என்று குரும்பரம் பராப்பிரபாவம் என்னுர்நூல் கூறுகிறது.

[தொடர்ச்சி 8-ம் பக்கம்]

[முன் பக்க தொடர்ச்சி]

இவர்களை முதலாளிகள் அல்ல என்றுகூறிவிடமுடியுமா? இவர்களும் முதலாளிவர்க்கத்தைச் சேர்ந்தவர்கள்தான். இந்த நாட்டு வசதி, பொருளாதாரம், சூழ்நிலை ஆகியவற்றிற்கேற்ப இவன் முதலாளித்துவம் இருக்கிறது இதுவும் இடத்திற்கு இடம் நாட்டிற்கு நாடு வேறுபடும் நாம் முன் கூறியதுபோல, இவனை மட்டும் பாராமல் நாட்டின் நிலையையும் இவன் நிலையோடு ஒப்பிட்டுப் பார்த்தால் இவன் முதலாளித்துவம் நன்ருக விளங்கும் ஒரு மூட்டை நெல்லைத்தூக்கி கொண்டுபோகும் ஒரு வாலிபனைச் சுட்டிக்காட்டி, ஒரு பத்து வயது பையன் தலையில் ஆறுமரக்கால் நெல்லைக் கட்டித்தூக்கும்படி வற்புறுத்தினல், அவன் தூக்க இயலாது தவிக்கும்போது என்னடா ஒரு மூட்டையோடு இந்த ஆறுமரக்காலை ஒப்பிட்டால் மிக அற்பம் இதற்குஇப்படி துவளுகிருயே என்று கிண்டல் பேசினல் எத்துணை நகைப்பிற்கிடமோ எத்துணை தப்பான வாதமோ அத்துணை தப்பான வாதந்தான் வடநாட்டு முதலாளிக்குத் தென்னட்டு முதலாளிகள் எல்லோருமே ஈடாகார் என்பது. ஆக பணக்காரன், முதலாளி யார் என்பதையும், தென்னட்டு அகராதியிலும் அந்தந்த நாட்டுப் பொருளாதாரத்திற்குகேற்ப. மேற்கண்ட வார்த்தைகட்கு இடமுண்டு என்பதைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிருேம்.

——

சென்ற இதழ் தொடர்ச்சி

மகாபாரதம்

வில்லிதரும் விளக்கம்.

ஆதிபருவம்] [குருகுலச்சருக்கம்

ஆசிரியர் U. S. இராமசாமிப் பிள்ளை செயங்கோண்டம்.

—:—

முன்பு வைவசுதமனு என்னும் அரசன் சுத்தியுமநன் என்னும் புத்திரனைப்பெற்ருன் என்றும் அச்சுத்தியுமநன் ஒருநாள் வேட்டைமேற்சென்றபோது உமாதேவி தவம் செய்த காட்டை அடைந்ததனல் இளை என்னும் பெண்ணுருவையடைந்தனன் என்றும் கூறியசெய்யுளைப் பற்றி ஆராய்ந்தோம். இப்போது அடுத்துள்ள செய்யுளில் இந்த இளை என்னும் பெண் ஒரு சோலையில் தங்கியிருந்தனள், அவளைப் புதன் கண்டு மோகங் கொண்டு புணர்ந்தவரலாறு குறிப்பிடப்படுகிறது. அதைப்பற்றி ஆராய்வோம்.

அச்செய்யுள்:—

"மாரகாகளம் எழுவதோர் மதுமலர்க்காவில்
தாரகாபதி புதல்வன் அத்தையலைக்காணு
வீரகாம பாணங்களின் மெலிவுற மயங்கித்
திரகாமமுஞ் செவ்வியும் மிகும்படி திளைத்தான்,"

இதில் சந்திரனுடைய புத்திரனகிய புதன் முன் சொல்லப்பட்ட இளை என்னும் பெண்ணை ஒருசோலையிற் கண்டு மோகங் கொண்டு அவளைச்சேர்ந்தான் என்று கூறப்படுகிறது.

(இ-ள்) மாரகாகளம்—குயிலின் ஓசை, எழுவது—மிகுந்துள்ளதும், மது—தேன் நிறைந்த, மலர்—பூக்களையுடையதுமாகிய, ஓர் காவில்—ஒரு சோலையில், தாரகாபதி-நட்சத்திரங்களுக்குத்தலைவனகிய சந்திரனது புதல்வன்—புத்திரனகிய புதன், அத்தையலை—(முன் சொல்லப்பட்ட) அந்த அழகிய (இளை என்னும்) பெண்ணை காணு—பார்த்து, வீரம்—வெற்றியையுடைய, காம பாணங்களின்—மன்மத பாணங்களினல், மெலிவுற—வருத்தம் மிகுதியாக, மயங்கி—மயக்கத்தையடைந்து, காமமும்—விருப்பமும், செவ்வியும்—இணைவிழைச்சின் காலமும், மிகும்படி—அதிகமாகும் வண்ணம், திர—அவ்விரண்டும்முடியுமாறு, திளைத்தான்—அனுபவித்தான் (எ-று)

(இதன்பொழிப்பு) குயிலின் ஓசை மிகுந்துள்ளதும் தேன்நிறைந்த பூக்களையுடையதுமாகிய ஒரு சோலையில் நட்சத்திரங்களுக்குத் தலைவனகிய சந்திரனது புத்திரனகிய புதன் (முன்சொல்லப்பட்ட) அந்த அழகிய (இளை என்னும்) பெண்ணைப்பார்த்து வெற்றியுடைய மன்மத பாணங்களினல் வருத்தம் மிகுதியாக மயக்கத்தையடைந்து விருப்பமும் இணைவிழைச்சின் காலமும், அதிகமாகும் வண்ணம் அவ்விரண்டும் முடியுமாறு அனுபவித்தான் என்பதாம். —(தொடரும்)

★ தமிழ் வளர்ச்சியில் ஆர்வமுள்ள ஒவ்வொருவரும் "பொய்யாமொழி"யின் சந்தாதாரராக சேர்ந்து வளர்ச்சியடைய செய்யுங்கள்.

பொய்யாமொழி
ஆசிரியர் ரா. பாஸ்கரனுர்

கதிர் 1 } 1981, கார்த்திகை 14 புதன் { மணி 14

"ஏரின் உழா அருழவர்; புயலென்னும்
வாரி வளங்குன்றிக் கால்"

மழையின்றேல் - உழவின்று; உழவின்றேல் விளைவின்று; விளைவின்றேல் பஞ்சம் பட்டினி பசி உண்டாதல் என்பதாம்.

அறநிலைய பாதுகாப்பு.

★

நமது மாகாண சட்டசபையில் இன்று முன் வந்துள்ள பிரச்சனை அறநிலையப் பாதுகாப்பு பற்றியது. இந்து மதத்துக்காக ஏற்பட்ட கோவில் தீர்த்தம் புனிதஸ்தலம், திருமூர்த்திகள் அதற்குரிய பூஜை நைவேத்தியங்கள் அர்ச்சனைகள் போன்ற முன்னர் சாஸ்திரப் ப்ரதாப முறைப்படி செய்ய வேண்டியதற்காக முன்வந்து அதை ஒழுங்குபடுத்த நினைத்து நடத்தும் அன்பர்களே சற்று சிந்தியுங்கள். நீங்கள் டிரஸ்டிகள் நியமிக்கும் விஷயங்களில் எவ்வளவு ஜாக்ரதையுடன் மதசம்பந்த நம்பிக்கையுடைய சாஸ்திரோக்த படி நடத்தக்கூடிய அன்பர்களை நியமிக்க வேணுமென்ற நல்ல எண்ணம் உதயம்பெற்று செய்யும் நண்பர்களே இதுவரை நடந்துவரும் கோவில் டிரஸ்டிகளில் கிட்டதட்ட 100-க்கு ஒருவர் இருவராவது கோவில் தர்ம சொத்துக்களை அனுபவிக்கக் கூடாதென்ற எண்ணமுடைய டிரஸ்டிகளைக் காட்ட முடியுமா? நித்தியபடி பூஜா நைவேத்திய காரியங்களுக்கும் உத்ஸவாதிகளுக்கும் நடத்தும் சிலவினங்களில் அதற்காக காட்டப்படும் கணக்குகளும் பில்களும் எத்தனை பில்கள் உண்மைக்கு புறம்பானதென்று தெரியுமா?

கோவில் மானியங்களை குத்தகைக்கு விடுவதிலும் சரியான உண்மை குத்தகை தொகைகளையும் தங்களுக்கு வேண்டிய உறவினர் மற்றவர்களுக்குவிட்டு அதைக்கொண்டு வேறு பிரதிபலன் கருதும் டிரஸ்டிகளில் எத்தனைபேரை நீங்கள் இதுவரை கண்டுபிடித்தீர்க[illegible] அர்ச்சனைக்காக வைக்கப்பட்ட நந்தவனத்தில் மரத்தினின்று கீழேவிழப்பட்ட மலரைஎடுத்து முகர்ந்ததற்காக சிவபக்தர் செருத்துணை நாயனுர் மற்றொரு கழற்சிங்கநாயனுர் மனைவியின் மூக்கைக்கூட அறுத்துவிட்டார் மேலும் கழற்சிங்கநாயனுர் தன் மனைவியை கையையும் வெட்டிவிட்டதாகவுள்ளதும் கடவுள் நைவேத்தியத்துக்காக ஒதுக்கப்பட்ட நெல்லை மிகுந்த உணவுப்பஞ்சத்தில் அந்த நெல்லை எடுத்து அரிசியாக்கி உட்கொண்டதற்காக மனைவியையும் கொன்று இளம் சிசு 3 மாதக்குழந்தையையும் அந்தஉணவின் சத்தால் ஏற்பட்டபாலை உண்டதால் அதையும் கொல்லவியாயமுண்டென்று கூறிக்கொன்ற கோட்புலிநாயனுர் சரித்திரம் கண்டும் டிரஸ்டிகள் கோவில் பூனை தேவர்க்கு அஞ்சாது என்ற பழமொழிபோல் கோவில் சொத்துக்களை பொய்க்கணக்கு எழுதிவரும் டிரஸ்டிகள் ஒரு சிறிதும் உணராமலிருப்பது விந்தையிலும் விந்தையாகவுள்ளது.

மேலும் (டிரஸ்டிக்கு பாத்தியமுடையவர்களை) டிரஸ்டிகளாயிருக்கத்தகுந்த அருகதையும் சட்டப்படி பாத்தியதையும் கொண்டவர்கள் யாரெனில் இந்துமத சாஸ்திரீய முறைப்படி கடவுள்கோவில் திருப்பணி குடமுறை வெண்சாமரைமுறை கைங்கரியங்களுக்காக சாஸ்திரோக்தமாய் 32 இலக்ஷணமுமுடையபெண்கள் எந்தவகுப்பிலிருப்பினும் அவர்களை தேவகைங்கரியங்களுக்காக கோயிலுக்குஆக கடவுளின் மனைவியாக ஒப்புக்கொண்டு பொட்டுக்கட்டி அவர்களை தனியொரு சமுதாயமாக்கி கோவில் கைங்கரியங்களுக்காகவும் கடவுளுக்குபெண்சாதியாகவுமாக்கி சமீபகாலம்வரை வைத்திருந்து சமீபத்தில் கடவுளின்பெயரால் விபசாரத்துக்கு ஏற்படுகிற முறையெனதள்ளி சாஸ்திரத்தை புறக்கணிக்க தைரியமாய் முன்வந்துசெய்தீர்களே அது நியாயம் போற்றகுரியது.

அப்படி விலக்கி நீங்கள் ஏற்கனவே மாமூலாய் நடந்துவந்த ஷெயார்கள் மானியங்களைப் பறித்துக்கொண்டு அவர்கள் தொண்டையும் விலக்கிய நீங்கள் சாதாரண பஸ்முதலாளிகள் போன்ற ஒவ்வொரு தற்காலிக வியாபாரத்திற்கும் நஷ்டஈடளிக்க வேணுமென்றுகருதி செய்யவேணுமென்றும் நீங்கள் ஷெயார்களுக்கு நஷ்டஈடு அளித்து விலக்கினீர்களா, பின்னர் அவர்கள்யோக்யமாய்வாழ விபசாரத்தில் விடுபட என்ன செய்தீர்கள். உங்கள் அறிவு மற்றைய சாஸ்திரசம்பிரதாயங்கள் மாறுமலிருக்க கருத்தில்கொண்டதுபோல்

...கு பரிந்து அவர்களின் மனம் திருப்தி யடைய ... கேள்விகளை எழுப்பும் சட்டசபை மெம்பர்கள் ஷ தேவதாசிகளின் நஷ்டஈடுபற்றி வாய்திறக்கவில்லையே ஏன்? பொறுப்பற்றமுறையில் திடீரென இதுவரைகோவில் திருப்பணி செய்துவந்து மானியத்திலும் கோவில் நைவேத்திய பிரசாதம் போன்றவைகளால் வாழ்க்கைநடத்திவந்த சந்ததியற்ற தாய்மார் வயோதியர்களும் பிச்சையெடுத்துண்ணும் நபர்களும் ஷ தொழில் முக்கிய வாழ்க்கையின் வருவாய் நடத்தி நேர்மையாய் காலங்கழித்த சில இளமாதர்களையும் இன்று அந்த வரும்படி இன்றி அவர்களை பூராவும் விபசாரத்திலேயே இறங்கிவிடக்கூடிய வகையிலும் அவர்கள் வாலிபம் மாறுதவர்களிடம் அன்பாய் அடைக்கலத்துக்குட்படுத்தியுள்ளவர்களைக் கட்டாயப்படுத்தி திருமணம் செய்துகொள்ள வேணுமென்றுகூட ஒருசட்டம் செய்யாமல் விட்டு விட்டு மேலும் விபசாரத்தை வளர்த்துவரும் நிலைமையை மாற்றியமைக்க இந்த புதுவழியாவது செய்ய முன்வாருங்கள்.

இந்து சட்டமும், சாஸ்திரமும் அன்று சாஸ்திரப்படி கோவில்களில் கடவுளுக்கு மனைவிகளாக பொட்டுக் கட்டப்பட்டவர்கள் ஷ தேவரடியார்களாவார்கள் கணவனின் சொத்துக்கள் மனைவிகளுக்கும் மக்களுக்குமுரியது ஒரு குடும்பத்தலைவன் தான் குடும்பம் பார்க்கமுடியாத நிலையில் தன்குழந்தைகளும் மைனர்களாகவோ அல்லது குடும்பம் வெளியுலகில் சஞ்சரித்து காரியம் பார்க்கமுடியாத நிலையோ ஏற்படுமானால் பேசும்திறமும், இல்லாவகத்திருக்க இல்லாததோன்றில்லை என்றபடி இல்லாள் ஆகிய ஷ தேவரடியார்கள் உலகப்பொறுப்பும் கடமையும் ஸ்தாவரசங்கம சொத்துரிமைகளையும் கண்காணிக்க வுரிமையுடையவளாகிறாள். இது சட்டம்காட்டும் விதி அப்படியிருக்க உண்மையென நம்பி கோவிலில் வீற்றிருக்கும் மூர்த்திகளில் மூர்த்திகரமிருக்கும் என்று சாஸ்திரபோதனையால் தோன்றி தங்களுக்கு கணவனுயிருக்க ஒப்புக்கொண்ட ஷ தேவரடியார்களை போதுமான சம்பளமுறையில் டிரஸ்டிகளாகவும் ஏன் தகுதியுடையவர்களை கமிஷனர் டிப்டிகமிஷனர் போன்ற பதவிகளில் தனிச்சலுகையளித்து நியமிக்க இந்த சர்க்கார் முன்வருமா? முன்வந்தால் கடவுள் காரியங்கள் சரிவர நடைபெறுமல்லவா? ஆங்காங்கு தோன்றியுள்ள இசைவேளாளர் சங்கங்களும் மற்றைய கடவுளின் மனைவிகளாகிய தேவரடியார்களும் முன்வருவார்களா? அன்றி காங்கிரஸில் நீண்டநாள் பணிபுரிந்து தொண்டாற்றி முட்டுக்கொடாமல் தட்டிக்காலைத் தட்டிவிட்ட செய்கையைக்கண்டும் வாளாவிருந்து வரும் தேசியத்திலகம் திரு, சி. பி. சுப்பையா போன்றவர்கள் முன்வருவார்களா?

மேலும் தாங்கள் இதற்கு முன்வருவது அவமானம் என்று பிறரால் கருத நேரிடுமென ஒதுங்கி நிற்பாரு? அவர் ஒதுங்கினின்றாலும் அவரை எந்த தேசியவாதிகளும் மற்றையவர்களும் அவரை குறிப்பிடும்போது சி பி. சுப்பையா ஒரு தேவரடியாள் மகன் என்பதை யாரும் சொல்லாதிருக்க நாம் கேட்டதில்லை அவரும் மற்றையவர்களும் மகாநாடுகூட்டி நியாயவாதத்திலோ முடியாவிடில் சட்டசம்மதமான கிளர்ச்சிக் கட்டுப்பாடு மூலமாயாவது ஷ டிரஸ்டு பாத்தியதையை பெற முழு முயற்சி செய்வீர்களா? ஆவனசெய்ய முற்படுங்கள் உறங்கியது போதும் விழியுங்கள் வீறுகொண்டு எழுங்கள் இசையுலக ஜோதிகளே ஒருகாலத்தில் கருதி ஏற்றுக்கொண்டபடி தேவர்களில் குபேர வம்சத்தால் முழங்கியதாய் சொல்லப்படும் இசைக்கருவிகள் மூலம் இன்பமூட்டும் இராஜரத்னங்களே! சுப்ரமண்யர்களே! வீருசாமிகளே! அபிராமிசுந்தரங்களே! அங்கப்பர்களே! பிச்சையப்பாக்களே! காளிதாசர்களே! ராஜாங்கங்களே! திருவீழிமிழலையாளர்களே! செம்மனார்கோவிலார்களே! நீடாமங்கலங்களே! மற்றய ஜெயராமன்களே! ராஜமாணிக்கங்களே! சிவவடிவேல்களே! சுப்டுகளே! ஏனைய தோழர்களே! மற்றைய இன்னலடைந்த சூது வாதறியாது சூழ்ச்சியில் சிக்கி கடவுளரின் மனைவிகளாக்கப்பட்டு கதிகலங்கிய கன்னியர்களே மாதர்திலகங்களே செய்வீர்களா பார்ப்போம் பொறுத்திருந்து.

"ஊழையு முட்பக்கங் காண்ப ருலைவின்றித்
தாழா துஞற்று பவர்"

உலைவு இன்றித் தாழாது உஞற்றுபவர் - தளர்வில்லாமல் குறையாது முயற்சிசெய்பவர் ஊழையுமுப் பக்கம் காண்பர் - ஊழையும் புறங்காட்டி ஓடச்செய்வர்.

உ. தா. விக்கிரமங்கலம் நடுநிலைப்பள்ளி கட்டிட நிதி வசூல்.

திருவாளர்கள்,	ரூ.	அ.	பை.
கிருஷ்மூர்த்தி அய்யர் உடையார்பாளையம்.	5	0	0
சின்னசாமி செட்டியார் அகரம்.	10	0	0
பத்மநாபபிள்ளை எரவாங்குடி.	10	0	0
முன்வார வசூல்	555	0	0
	580	0	0

நிதி அனுப்ப வேண்டிய விலாசம்:

காரியதரிசி

விக்கிரமங்கலம் நடுநிலைப்பள்ளி கட்டிட கமிட்டி

அம்பாபூர், குணமங்கலம் P. O.

பொய்யாமொழி

வார இதழ்

சந்தா விபரம்

ஆண்டு	ஆறு மாதம்	தனிப்பிரதி
3 0 0	1 12 0	0 1 0

கதை, கட்டுரைகளில் காணப்படும் பெயர்கள், யாவும் கற்பனையேயன்றி யாரையும் குறிப்பிடுவன அல்ல.

செய்திகள்.

வண்டிகட்டுகள்

முன்வெளியிட்ட 15—11—50ல் 22—11—50ல் இதழ்களில் கண்டுள்ள இடங்களில் வண்டிகட்டுகள் தேவையுடையவர்கள் தங்கள் கிராம கி. மு. அவர்களின் அத்தாக்ஷியுடன் அந்தந்த பிர்க்கா ரெவினியூ இன்ஸ்பெக்டர்களிடமும் அதில் எண்டார்சுமெண்ட் செய்திருக்க வேணுமென்று உத்திரவிட்டிருப்பதாய் தெரிவதால் ரெவினியூ இன்ஸ்பெக்டர் எண்டார்சுமெண்டும் வாங்கிக் கொண்டுபோய் வாங்க வேணுமென்பதை தெரிவிக்கிறோம்.

மதுவிலக்குக் கமிட்டி கூட்டம்.

மதுவிலக்கு கமிட்டிக்கூட்டம் 22—11—50ல் ஜெயங்கொண்டம் தாலூகா ஆபீசில் பகல் 12 மணிக்கு டிப்டி கலெக்டர் தலைமையில் கூட்டம் போடப்பட்டு ஷை கமிட்டி மெம்பர்கள் நாமிநேஷன்முறையில் தேர்ந்தெடுத்து அனுப்பியவர்களில் உ. தா. காங்கிரஸ் கமிட்டி தலைவரும் செயலாளரும் சேர்க்கப்பட்டிருக்கிதா என்று கேட்டு சேர்த்து அனுப்பும்படி அப்ரூவ் செய்யாமல் திரும்பிவந்து விட்டபடியால் ஏற்கனவே அனுப்பிய லிஸ்டிலேயே இருப்பதாக எழுதி அனுப்புவதோடு கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது.

அரியலூர் ரெவினியூ டிவிஷனல் ஆபீசர் அவர்கள் வந்திருந்த கமிட்டிமெம்பர்கள் நால்வருக்கும் மதுவிலக்கு பற்றிய கொள்கைகளையும் கடமைகளையும் தெள்ளத்தெளிய விளக்கி ஒரு சிறந்த சொற்பொழிவாற்றினார் அத்துடன் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டு அடுத்த 2-30க்கு உணவுகமிட்டி கூட்டம் நடத்த ஏற்பாடாயிருந்தது. ஆனால் உணவுகமிட்டி மெம்பர்கள் யாரும் ஒருவர்கூட ஆஜரில்லாமையால் கூட்டம் நடைபெறுமல்தானே தள்ளிப்போய்விட்டது.

மதுவிலக்கு கமிட்டிக்கு நாமிநேஷனில் மெம்பர்கள் சேர்க்கப்பட்டது. எல்லாம் காங்கிஸ்காரர்களும் தாலூகா காங்கிரஸ் கமிட்டி தலைவர் செயலாளர்களையே பொறுக்கி நியமித்தது ஏன்? காங்கிரஸ்காரர்களிலேயே பலர் மதுவை விலக்காதவர்களென சந்தேகம் ஏற்பட்டுள்ளது தான் என்றால் தப்பாகுமா? ஆகையினால் தங்கள் மெம்பர்களை கண்கணிக்கவே போடப்பட்டிருப்பார்களோ என்னவோ?

— ஓர் சந்தேகி.

ஃ ஃ ஃ

தினமணி 23—11—50 செய்தி 24—11—50 வெளியீட்டில் இரண்டே ரக மெம்பர்களில் உழைக்கும் மெம்பர்கள் யார் என்ற தலைப்பில் சொல்லியுள்ள தகுதியில் 3-வது அம்சம் மதுவருந்தக்கூடாது. என்றிருப்பதைப்பார்த்தாலே விளங்கலாம். (சாதாரண மெம்பர்களுக்கு விலக்குபோலும்) ஆகவே காங்கிரசில்மதுவருந்துபவர்களிருப்பார்களோவென ஏற்பட்ட தங்கள் சந்தேகம் ஏன்? எனக்கும் சந்தேகமே.

—ஆசிரியர்

சென்னை மாகாண மில்காரர்களுக்கு குறிப்பிட்ட நம்பர்கள் நூலை ஏற்றுமதி செய்யக்கூடாது என இட்டுள்ள உத்திரவு சற்று மேல் 1. 2. நெம்பர் கூடுதல் குறைச்சலாக செய்தாலும் பொருந்துமா மெல்லிய[illegible]க 80—100, நம்பர் நூல்களை ஒவ்வொரு தறிக்காரர்களும் திருச்சியில் போய் எடுத்து வருவது இப்போதைக்கு மாறுமா மாறுதோ? திருச்சிக்குபோய் மில் டிப்போக்களில் தறிக்காரர் கார்டுகள் சேர்ந்து சில கார்டுகள் போவதாலும் கள்ள மார்க்கட்டு நடக்க ஏதுவாவதோடு பெருவாரி தறிக்காரர்கள் ஒதுக்கும் கொஞ்ச நூலும் வாங்காமலேயே நின்று மில்காரர்கள் நூல்களை இஷ்டப்படி நடத்த ஏதுவாகிறதென்பதை சம்பந்தப்பட்டவர்கள் கவனித்து அறிந்து ஆவன செய்ய முற்படுவார்களென்று நம்புகிறோம்.

ஃ ஃ ஃ

தீபாவளி பண்டிகை தினத்தன்று அரசாங்கத்தில் தீபாவளியை முன்னிட்டு ஸ்பெஷலாக ஜீனி வினியோகம் செய்யப்பட்டது. இத்தாலூகாவில் உ. தா. தாசில்தார் அவர்கள் அலாட்மெண்ட் போட்டும் மொத்தவியாபாரி சர்க்கரை இல்லையென்று கையைவிரித்து விட்டார். ரொம்ப பொதுமக்கள் வருத்தம்சொல்லமுடியாத அளவில் இருக்கிறது.

S, கிருஷ்ணமூர்த்தி,
காரியதரிசி, வியாபாரிகள் சங்கம்,
உடையார்பாளையம் தாலூகா.

ஃ ஃ ஃ

ரேஷன் அரிசி...!
இல்லை வயிற்றுவலி....!

ஆம்...! சென்றவாரம் நகரரேஷன் கடைகளில் வழங்கப்பட்ட அரிசி உண்மையில் அரிசியல்ல...! பின் வயிற்றுவலி என்ற நோய், அரிசி உருவிலே வழங்கப்பட்டது. "இது நியாயமா? என்று கேட்கக்கூட வயிற்றுவலி இடந்தரவில்லை.

பாமரமக்களின் நலனுக்கு - பாட்டாளிகளின் சௌகரியத்திற்கு ரேஷன் வைக்கப்பட்டது என்று கூறுபவர்கள் இவ்வாறுஉள்ள அரிசியைத்தான் வழங்க வேண்டும் என்று கட்டளையும் இட்டனரா? ஹோல்சேல் கொள்முதல் வியாபாரிகளிடம் நெல் அறவையும் சேர்த்துக் கொடுப்பதினால் ஏற்படும் தறுவதல்தானே நாற்ற அரிசிக்குக் காரணம். இனியேனும் நேரே நெல்லாகவே கொடுக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கட்டளை இடுவார்களாவென எதிர்பார்க்கும்:

V. சீனுவாசன், ஜெயங்கொண்டம்.

றுகதை

மலர்ந்த வாழ்வு

கே. ஏ. அங்கமுத்து

சென்ற வாரத்தொடர்ச்சி.

என் முன்பாக பலகாரத்தட்டுடன் அந்த அழகி காட்சியளித்தாள் உயிர்ஓவியமாகத் தீட்டப்பட்டு நிறுத்திவைக்கப்பட்டால் எப்படியிருக்குமோ அதுபோல அவள் என் முன் ஒளிர்ந்தாள் அவ்வழகி என் கண்களை மட்டுமல்ல கருத்தையும் முதற்பார்வையிலேயே கவர்ந்துவிட்டாள். என் உள்ளமும் உயிரும் ஒருங்கே அவளிடத்தில் தஞ்சமடைந்து விட்டனவென்றே சொல்லவேண்டும் என்வாழ்வில் எத்தனையோ அழகிய மங்கையரைக் கண்டிருக்கிறேன் பேசியிருக்கிறேன், ஆனால் என் உள்ளம் இவ்விதம் சலனப்பட்டதில்லை என்வாழ்வில் இவ்வனுபவம் புதிதாகும் மீண்டும் ஒருமுறை அவள் அழகிய வதனத்தைக்காண விழைந்து நான் ஏறிட்டுப் பார்த்தேன் உடனே என் கண்களும் அவள் கண்களும் சந்தித்தன. அவளும் கூர்ந்து என்னை கவனித்துக்கொண்டிருந்ததாகத்தெரிந்தது, இருவர் கண்களும் நெடுநாளாய் பழகியவைபோல் ஏதேதோ பேசிக்கொண்டன. உடனே திடீரென்று என் சுயநினைவுக்கு வந்தேன். பத்மா, எனக்குச்சிறிது தூரத்தில் பலகாரத் தட்டுடன் நின்றுகொண்டிருந்ததைக் கண்ட நான் பழகியவனைப்போல் "ஏன் பத்மா? நின்றுகொண்டிருக்கிறாய்?" என்று துணிச்சலுடன் பேசினேன், என் நண்பர் திருவேங்கடம் தங்கைதான் இவ்வழகி என்ற எண்ணத்துடனே இத்துணிச்சலான பேச்சை பேசத்தொடங்கினேன் பத்மா சற்று தயக்கத்துடன் "இதோ பலகாரங்கள் கொண்டுவந்திருக்கிறேன் சாப்பிடுங்கள்." என்று அன்புமலர மறுவார்த்தை கூறி பலகாரத்தட்டை என்முன் வைத்துவிட்டு அவள் அறைக்குள் சென்றுவிட்டாள் நான் அதை கொஞ்சம் சாப்பிட்டுவிட்டு கை அலம்ப எழுந்தேன். என்ன! அதற்குள் சாப்பிடாமல் அப்படியே எழுந்துவிட்டீர்?" என்று கூறிக்கொண்டே பத்மா அவ்வறை தலைவாசலில் வந்து தயங்கி நின்றவண்ணம் அன்புததும்பக்கூறினள் இல்லை பத்மா எனக்கு ஏனோ வயிறு கொஞ்சம் மலிப்பாகயிருக்கிறது. அதனால்தான் என்று பதிலுரைத்தேன் உடனே பத்மாவை அவள் தாயார் கூப்பிட்ட சப்தம்கேட்டது நான் வருகிறேன் என்ற பதிலுடன் வேறு அறைநோக்கி சென்றுவிட்டாள். அதற்குள் என் நண்பர் திருவேங்கடம் பாலு என்றகுரலுடன் என்னை நோக்கிவந்து என்ன மிஸ்டர்! சாப்பிட்டீரா? பத்மாவுக்கு தங்களைப்பற்றி தெரியாது. என்ற பேச்சை ஆரம்பித்தவண்ணம் அங்குள்ள பெஞ்சுகளில் அமர்ந்தார்.

"என்னசெய்வது பாவம் என் தங்கை பத்மாவின் கணவன் தஞ்சாவூரில் நல்ல கௌரவமான உத்தியோகத்தில் இருந்தார். திருமணம் செய்து சுமார் ஆறுமாதங்களில் நிமோனியா விஷஜுரத்தினல் இறந்துவிட்டார்." இன்று என் தங்கை எவ்வளவு ஆடம்பரமாக இருக்கவேண்டியவள் விதி அவளைச் சதிசெய்துவிட்டது. நண்பா! என்றசோகப் பேச்சுக்களைப்பேசினர். இதைக் கேட்ட என்மனம் மறுமலர்ச்சியுற்று நம்தமிழகத்தில் விதவையென்று வாழும் கன்னிப்பெண்களின் எண்ணிக்கை என்கண்முன் வந்துநின்றது. ஆம்; இதுவே நம்கடமை தமிழகத்தில் இனி கன்னிப் பெண்கள் விதவையாக வாழும் வகையற்றவாழ்வை வகையுடன் வாழச்செய்ய அவர்கள் இருண்ட வாழ்வில் மங்காத ஜோதிபோல் வாழ்வுறச்செய்ய இதுவே நம்கடமை, வரண்ட வாழ்விற்கு வழிதேட நாமே வழிகாட்டினல் என்ன? இன்று தமிழகப்பெண்கள் தாழ்வடைவதும் இதனாலன்றோ? என்று என் மனம் சீர்திருத்தசிந்தனையில் சஞ்சரிக்கத் தொடங்கிற்று, மறுநாள் காலை எல்லோரும் மணமக்களுடன் மணமகன் ஊருக்குப்புறப்பட ஏற்பாடுகள் செய்துகொண்டிருந்தார்கள். நானும் என் ஊருக்குத் திரும்பவேண்டி திருவேங்கடத்தினிடம் கூறினேன். இதைக்கேட்ட அவர் ஊருக்குவந்து இரண்டு நாள் தங்கி தான் போகவேண்டும்; என்று தடுக்கமுடியாத பிடிவாதமாக அழைத்தார். எனக்கும் ஆபீஸ் ஐந்து நாளைக்கு லீவ் இருப்பதால் நான் திருவேங்கடம் ஊராகிய சேலம் வருவதாக கூறிவிட்டு என் படுக்கை முதலிய சாமான்களைஎடுத்து பிரயாணத்திற்கு ஆயத்தமானேன். அன்றுகாலை பத்துமணிக்கு சென்னையில் புறப்படும் ரயிலில் சேலம் புறப்பட்டோம்.

நான் உட்கார்ந்திருக்கும் முன்பெஞ்சில் பத்மாவும் மற்றும் சில பெண்களும் அமர்ந்தனர் ரயிலும் புறப்பட்டது. பத்மாவின் உருவம் என்னைச் சிந்தனைப்பெட்டியில் போட்டிக்காக என்னைக் கொண்டுபோய் நிறுத்தியது. என்மனம் சீர்திருத்த உள்ளத்தைப் பல போட்டியிட்டு கடைசியில் எப்படியாவது நாம் இவ்வழகியை அடைந்தே தீரவேண்டும் என்ற முடிவில் வெற்றிபெற்றது. அத்துடன் தமிழன்கடமைஇதுவும் ஒன்று என்று இரண்டாம் போட்டியிலும் வெற்றிபெற்றது. இதற்குள் ரயில் ஜோலார்பேட்டை ஜங்ஷன் வந்தாகிவிட்டது. உடனே எல்லோரும் வாழைப்பழம் வாங்கவும். சோடா வாங்கிச் சாப்பிடவும் இருந்தார்கள். என்மனம் எல்லாவற்றையும் வெறுத்து பத்மாவையே நினைத்தவண்ணம் இருந்தது. என் அழகி பத்மாவின் சந்திர பிம்பத்தையொத்த வட்டமான முகத்தை அடிக்கடி பார்த்து மகிழ்ந்தவனாகயிருந்தேன். அதற்குள் எதிரில் உட்கார்ந்திருந்த ஒரு அம்மா என்னங்க, ஏதாகிலும் வாங்கிக்கொள்வது தானே? என்று இரக்கம்காட்டியவண்ணம் என்னைப் பார்த்துக்கூறினர். எனக்கு ஒன்றும்வேண்டாம்! என்று பதிலுரைப்பதற்குள் ஏன், ஏதாகிலும் வாங்கிச்சாப்பிடுங்கள் என்றாள் பத்மா! எனக்கு ஒன்றும் வேண்டாம் என்று பதிலுரைப்பதற்குள் ரயில் புறப்பட்டுவிட்டது பத்மா என்னை அடிக்கடி பார்ப்பதும் முகமலர்ச்சியுடன் காணப்படுவதும் என்மனதை அதிக மகிழ்ச்சியடையச் செய்தது. என் ரயில் பிரயாணம் சென்னையிலிருந்து சேலம் வந்தடைந்ததே எனக்குக்கூட கால அளவு தெரியாமல் சென்றுவிட்டது. ரயிலடியில் இருந்து மணமகன் திருவேங்கடம் வீடுபோய் சேர்ந்தோம்.

— தொடரும்.

[3-ம் பக்க தொடர்ச்சி]

ஆனல் பூரிசங்கராச்சாரியாரை காலமே விரட்டி விட்டது! அரிசன ஆலயப்பிரவேச சட்டம் அவர்கள் குலத்தினரே செய்யும் சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது! காலத்தின் வேகத்தை யாரே தடுக்கமுடியும்.

சமீபத்தில் நிகழ்ந்த அசாம் பூகம்பம் இமயமலையை 150 அடி உயர்த்திவிட்டது. சிலமலைகளை தரையினுள் மறையச்செய்துவிட்டது. நேருவை விரட்டித்தடுத்த சமஸ்தான காஷ்மீர், அந்நேருவையே அடைக்கலம் புகச் செய்துவிட்டது. இந்நிகழ்ச்சிகளெல்லாம் ஆண்டு கணக்கில் அல்ல! தோசை திருப்பும்நேரத்தில்தான்! கம்யூனிஸ்டுகளை வஞ்சம் தீர்க்கவேண்டும் என்ற அதே நேருதான், கல்கத்தா தேர்தல் (சரத்போஸ் வெற்றி) காங்கிரஸ் தோல்விக்குபின் கம்யூனிஸ்டுகளை திருப்தி செய்யவேண்டும் என்ற தொனியில் பேசஆரம்பித்துவிட்டார் நமது பிரதமர் நேருவின் மேதைகாலத்தை உணரும்படி செய்துவிட்டது மக்களின் குறைகளை உணர்ந்து நாணயமாக செயலாற்றினல் கம்யூனிஸத்தின் கொட்டத்திற்கும் - ஹிம்சைக்கும் எப்படி பொதுஜன ஆதரவு கிடைக்கும்?

அகில இந்திய சனாதன மகாநாடு அமதாபாத்தில் கூடியது 1935ல் என்று ஞாபகம்: இதில் கல்கத்தாவிலிருந்துவந்த ஓர் சனாதனப் பிரதிநிதி கோட்டும், சூட்டும் போட்டிருந்ததற்காக அவரை வெளியேற்ற சிலமணி நேரம் சொற்போர் நடந்து மகாநாடே அல்லோல கல்லோலப்பட்டு விட்டதுஎன்பது, நான் நேரில்கண்ட காட்சி! அதேசனாதன மகாநாடு அடுத்த ஆண்டில் சென்னையில் நடந்தது. இம்மகாநாட்டில் பிரதிவாதி பயங்கரம் உபய வேதாந்த வித்வான் அண்ணங்கராச்சாரியார், வேதம் அனாதி, (ஒருவரால் உண்டாக்கப்பட்டது, ஒருகாலத்தில் உண்டானது, அல்ல. இயற்கை) என்றார். இதைகாசியில் இருந்துவந்த சனாதனப்பிரதிநிதி உபயவேதாந்த வித்வான் கிருஷ்ணமாச்சாரியார் என்பவர், அனாதி என்பது சரியல்ல! வேதம் ஒருவரால் ஒருகாலத்தில் உண்டாக்கப்பட்டது, என்று ஆதாரங்களோடுகூறி, வேதம் அனாதி யென்றுகூறும் மனுதர்மத்தை அறவே மறுத்தார். பிரதிவாதி பயங்கரம் என்ன சாமான்யப்பட்டவரா இருவரும் [illegible] என்பதற்கு தர்க்கரீதியாகப்பேசி வாதிட்ட[illegible]. ஆனல் வாதம் முடியவில்லை; மூன்றுநாள் நடந்தது. இதன்பிறகு பெரியமடாதிபதிகள் தலையிட்டு, வேதப்பிரமாணங்களை முதன்மையாகவைத்து நித்தியஜீவனம் செய்யவேண்டிய வைதீகர்களாகிய நாம், வேதம் கற்பனை என்ற நாஸ்திகவாதம் செய்தால் பொதுஜனங்கள் நம்மை மதிக்கமாட்டார்கள், என்று சமாதானம் செய்துவிட்டார்கள். இதுவிஷயம் சுதேசமித்திரனிலும் வெளிவந்திருக்கிறது.

ஸ்ரீரங்கத்தில் பல்லாண்டுகளுக்குமுன், "பல்லாண்டு" பாடும்போது தமிழ் சூத்திரபாஷை அதில் பகவானைப் பாடுவதா? என்ன அனியாயம் என்று ஒருவடகலை வித்வான் பல்லாண்டு பல்லாண்டு யென்பதை வடமொழியில் "*தந்தஸம்வஸ்ச்சரம் தந்தஸம்வஸ்ச்சரம்" என்றுபாட ஆரம்பித்தாராம்! துவேஷபுத்தி யாரை விட்டது! இது 1938ல் தென்கலையார் மகாநாட்டில் வெளியான செய்தி இதனல்தான் ஒருபெரியார், கல்வி குலம், செல்வம் இம்மூன்றினும் உயர்ந்தவன் என்னும் செருக்கை அறவே விடவேண்டும் என்றார். இப்படி விட்டவர்கள் முக்குறும்பறுத்த மூனிவர், என்று போற்றுவார்கள்.

காலம் கனவேகமாகச் சென்றுகொண்டிருக்கிறது. காஷ்மீரத்தைப்பாருங்கள்! அங்கு உழுபவனுக்கே நிலம் சொந்தம் ஆகிவிட்டது; நேற்றுதான்! பிரிட்டிஷ் ஆட்சிக்குகூட வணங்காத நேபாளம் மணிமுடி இன்று டில்லியை புகலிடமாக - அடைக்கலம் புகுந்துவிட்டது. பாஷாணத்தில்பிறந்தபுழு வாழைப்பழத்தை முகர்ந்தால் இறந்துவிடுகிறது. பாஷாணத்தைவிட வாழைப் பழம் சாதாரணமானதுதான். ஆனல் பாஷாணப் புழுவின்கதி நாம் சாதாரணமாய் சாப்பிடும் வாழைப் பழத்தினிடம் முடியாது இதை அறிந்து மனிதவர்க்கத்தில் ஒருசிலர் மாத்திரம் கொண்டிருக்கும் செருக்கை அறவேமறந்து அகந்தையை விட்டொழித்தால் நாடுநலம்பெறும் என்று கூறி இக்கட்டுரையை முடிக்கிறேன்,

* தந்தம்—பல்; ஸம்வஸ்ச்சரம்—ஆண்டு.

அறிஞர் C. N அண்ணாதுரை M.A., முன்னிலையில்
3—12—50 ஞாயிற்றுக்கிழமை மாலை 5-30 மணிக்கு
நல்லுணர்ச்சி நாடக சபையாரின்
"வருங்கால வீரன்"
(கதை-வசனம்-பாடல்-நடிப்பு:-தோழர் அ. வெ ரமணி)
சென்னை வி. பி. ஹாலில் நடைபெறும்
டிக்கட்டு விபரம்:—ரூ. 3, 2, 1. (வரியுள்பட)
M. S. M. முகைய்தீன் ஆர்கனைசர்.

9-11-50ல் முதல் இதழ் வெளிவந்துவிட்டது.
"கலைஞன்"
(மாத இதழ்)
ஆசிரியர்: சிதம்பரம், ஜெயராம்.
தனிப்பிரதி விலை 4 அணா.
விபரங்கட்கு:-
மானேஜர், "கலைஞன்" காரியாலயம்,
தபால் பெட்டி நெ. 18 சிதம்பரம்.

Printed by A. P. Ramaswami Pillai at the Sri Rathna Press, (Branch) Jayankondacholapuram.
Edited and Published by M. Bhaskaranar, 17, Katcheri Street, Jayankondacholapuram.